# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2019.11.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தம்)

**(383 ஆம் அத்தியாயமான) பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 28.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச்சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் விரிவுப்பெயரைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான விரிவுப்பெயரின் சட்டப்பயனானது, விரிவுப் பெயரில், "சபை" என்னும் சொல்லை அகற்றி "பாராளுமன்றம்" என்னும் சொல்லை உட்புகுத்துவ தாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(i) "செயலதிகாரி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தைஅகற்றுவதாகும்;

(ii) "குழு", "சபை", 'உறுப்பினர்'', ''பாராளுமன்றஅலுவலர்'' என்னும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களுக்குப் பதிலாகப் புதியவரைவிலக்கணங்களை இடுவதாகும்; அத்துடன்

(iii) ''உறுப்பினரொருவரென்ற தன்மையிலான நடத்தை'', ''ஆவணம்'', ''இலத்திரனியல்'', ''பாராளுமன்றம்'', ''பாராளுமன்றவளவுகள்'', ''பாராளுமன்ற நடவடிக்கைகள்' மற்றும் ''வெளியீடு'' என்னும் சொல்லமைப்புகளுக்கான புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது, ''செயலதிகாரி'' மற்றும் ''சபை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செயலாளர் நாயகம்" மற்றும் ''பாராளுமன்றம்'' என்னும் சொற்களை இடுவதும், "தலைவர்" என்னும் சொல்லை விட்டுவிடுவதுமாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறான பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் ''தலைவர்'' என்னும் சொல்லைஅகற்றுவதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் "தலைவர்'' என்னும் சொல்லை அகற்றுவதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டமூலத்தின் 11 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறானபிரிவின் சட்டப்பயனானது, "சபை" மற்றும் ''சுருக்கெழுத்தாளர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாராளுமன்றம்" மற்றும் 'எழுத்துப்படிவப் பணியாட்டொகுதி உறுப்பினர்'' என்னும் சொற்களை இடுவதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறானபிரிவின் சட்டப்பயனானது, "தலைவர்' என்னும் சொல்லை நீக்கிவிடுவதும் ''செயலதிகாரி'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பாராளுமன்றச் செயலாளர் நாயகம்'' என்னும் சொற்களை இடுவதுமாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறான பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் ''தலைவர்'' என்னும் சொல்லை விட்டுவிடுவதாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 22அ, 22ஆ மற்றும் 22இ என்னும் புதிய பிரிவுகளைஉட்புகுத்துவதாகும். புதியபிரிவுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றன :-

(i) சார்த்தப்பட்டவொரு தவறுபற்றிமுறைப்பாடொன்றைச் செய்வதற்குச் சபாநாயகர் உறுப்பினரொருவருக்கு அனுமதியளிக்கலாம்;

(ii) சார்த்தப்பட்டவொரு தவறு சட்டத்துறைதலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துவதற்காகவும்;

(iii) விண்ணப்பமானது உரியமுறையில் செய்யப்பட்டுள்ளதென முடிவான சான்றாகவமைவதற்கு ஏதேனும் விடயத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் விண்ணப்பமொன்று செய்யப் படுவதற்காகவும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறானபிரிவின் சட்டப்பயனானது, "நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின்கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை நீக்குவதாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைநீக்குவதாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டமூலத்தின் 11 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் "வாயிற்பெருமகன்'' மற்றும் "தலைவர்'' என்னும் சொற்களை விட்டுவிடுவதாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் ''தலைவர்'' என்னும் சொற்களை விட்டுவிடுவதாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் ஆ வைத்திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பாகம் ஆ வின் 9 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் புதியவொரு விடயத்தை இடுவதாகும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கானபொதுத் திருத்தமொன்றைச் செய்வதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ''செயலதிகாரி, ''பாராளுமன்றச் செயலதிகாரி'':, "தலைவர்'' அல்லது "சபாநாயகர்'' மற்றும் "இலங்கை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செயலாளர் நாயகம்", "பாராளுமன்றச் செயலாளர் நாயகம்", "சபாநாயகர்'' மற்றும் "இலங்கை" என்னும் சொற்களை இடுவதாகும்.

## பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தம்)

ச.வ.ஓ. 1/2019

### (383ஆம் அத்தியாயமான) பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப் பெயர்.**

*1*. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**383ஆம் அத்தியாயத்தின் விரிவுப்பெயரைத் திருத்துதல்.**

*2*. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1953ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது:-

> ''பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்கும், வரைவு படுத்துவதற்கும்; பாராளுமன்றத்தில் பேச்சு, விவாதம் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றுக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும்; பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல்களுக்கான தண்டனைக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; பாராளுமன்ற அறிக்கைகள், பத்திரங்கள், நிகழ்ச்சிக் குறிப்புகள், தீர்மானங்கள் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றை வெளியிடுவதில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள ஆட்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்குமானதொரு சட்டம்.''

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.**

*3*. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''செயலதிகாரி'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலமும்;

(2) ''குழு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"குழு'' என்பது, பாராளுமன்றத்தின் ஏதேனும் குழு என்று பொருளாகும்;

(3) ''குழு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

''உறுப்பினரொருவரென்ற தன்மையிலான நடத்தை' என்பது, பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாகப் பாராளுமன்ற உறுப்பினரொருவரென்ற தன்மையிலான நடத்தை என்று பொருளாகும்;

(4) "உறுப்பினரொருவரென்ற தன்மையிலான நடத்தை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

''ஆவணம்'' என்பது, பின்வருவனவுட்பட எவ்வடிவத்திலுமான பதிவேடொன்றை, தகவலை, தொடர்பாடலை அல்லது கொடுக்கல்வாங்கலை உள்ளடக்கும்:-

(அ) எழுத்து, அச்சு அல்லது இலத்திரனியல்;

(ஆ) செவிப்புல மற்றும் காணொளிப் பதிவுகள்; அத்துடன்

(இ) சொற்கள், எண்கள், சின்னங்கள், ஒலிகள், வரைபடங்கள், வரைதல்கள்;

"இலத்திரனியல்" என்பது, 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(5) "சபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

"சபை" என்பது, பாராளுமன்ற அவை என்று பொருளாகும்;

(6) "உறுப்பினர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

"உறுப்பினர்" என்பது, பாராளுமன்ற உறுப்பினர் என்று பொருளாகும்;

(7) "சபையின் அலுவலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"பாராளுமன்ற அலுவலர்" என்பது, பாராளு மன்றச் செயலாளர் நாயகம் என்று பொருளாகும் என்பதுடன் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதிக்குக் காலத்துக்குக்காலம் நிரந்தர மாகவோ அல்லது தற்காலிகமாகவோ நியமிக்கப்படக்கூடிய எவரேனுமாளையும், பாராளுமன்ற வளவுகளினுள் கடமை யிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலரையும் உள்ளடக்கும்;

(8) "பாராளுமன்ற அலுவலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "பாராளுமன்றம்" என்பது, இலங்கையின் பாராளுமன்றம் என்று பொருளாகும் என்பதுடன் ஒரு குழுவையும் உள்ளடக்கும்;

"பாராளுமன்ற வளவுகள்" என்பது, பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி இடப்பரப்பு மற்றும் ஒவ்வொரு கட்டிடமும் அல்லது ஒரு கட்டிடத்தின் பாகமும் என்று பொருளாகும் என்பதுடன் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட வேறு ஒவ்வொரு கட்டிடத்தையும் அல்லது ஒரு கட்டிடத்தின் பாகத்தையும் உள்ளடக்கும்;

"பாராளுமன்றநடவடிக்கைகள்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) சபையின் அல்லது அதன் குழுக்களின் அலுவல்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக ஓர் உறுப்பினரினால் அல்லது பாராளுமன்ற அலுவலரினால் அல்லது சபையின் முன்னர் அல்லது அதன் குழுக்களின் முன்னர் மற்றும் ஓர் அமர்வின் போது வருகைதரும்படி கட்டளையிடப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் சொல்லப்பட்ட, செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எல்லாக் காரியங்களும்;

(ஆ) எவரேனும் உறுப்பினர் அல்லது பாராளுமன்ற அலுவலர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது பாராளுமன்ற அலுவலராக அவரது அல்லது அவளது பணிகளை நிறைவேற்றுவதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக உறுப்பினர்களுக்கும் அத்தகைய எவரேனும் அலுவலருக்கும் இடையே சொல்லப்பட்ட, செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எல்லாக் காரியங்களும்;

(இ) சபைக்கு அல்லது ஒரு குழுவுக்கு ஆவணமொன்றை முன்வைத்தல் அல்லது சமர்ப்பித்தல்; சபையின் அல்லது அதன் குழுக்களின் ஏதேனும் அலுவலைக் கொண்டு நடாத்தும் அல்லது அதன் இடைநேர்விளைவான நோக்கங்களுக்காக ஆவணமொன்றைத் தயாரித்தல்; அத்துடன் சபையின் அல்லது ஒரு குழுவின் கட்டளையினால் அல்லது அதனைப் பின்பற்றி, ஓர் அறிக்கையுட்பட, ஓர் ஆவணத்தை வகுத்தமைத்தல், ஆக்குதல் அல்லது வெளியிடுதல் மற்றும் அவ்வாறு வகுத்தமைக்கப்பட்ட, ஆக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஆவணம்;

(ஈ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உதவுகின்ற அலுவலரொருவரினால் சபாநாயகருக்கு அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்ட ஏதேனும் அபிப்பிராயம் அல்லது மதியுரை;

''வெளியீடு'' என்பது, செவிப்புல மற்றும் காணொளி அத்துடன் நேரடியான அல்லது தாமதிக்கப்பட்ட ஒலிபரப்பு உட்பட, அச்சிலான, இலத்திரனியல் வடிவத்திலான வெளியீட்டை உள்ளடக்கும்.''.

(9) ''தலைவர்'' அல்லது ''சபாநாயகர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''தலைவர்'' அல்லது ''சபாநாயகர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'சபாநாயகர்' என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''தலைவரின் அல்லது சபாநாயகரின் அல்லது குழு தவிசாளரின் பணிப்பின் பேரில் வழங்கப்பட்ட செயலதிகாரியின் கைப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சபாநாயகரின் அல்லது குழு தவிசாளரின் பணிப்பின்பேரில் வழங்கப்பட்ட பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கைப்பட்ட'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) ''சபையின் அவையிலிருந்து ஐந்து மைல்களினுள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பாராளுமன்றத்திலிருந்து எட்டுக் கிலோ மீற்றர்களினுள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு, ''தலைவர் அல்லது சபாநாயகர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சபாநாயகர்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு, ''தலைவர் அல்லது சபாநாயகர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சபாநாயகர்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “இச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “இச்சட்டத்தின் 22ஆ(2) என்னும் பிரிவின்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு, “சபையின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரும் மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புகளை எடுப்பதற்குத் தொழிலுக்கமர்த்தப்பட்ட சுருக்கெழுத்தாளர் எவரும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பாராளுமன்றத்தின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரும் மற்றும் நிகழ்ச்சிக்குறிப்புகளை எடுப்பதற்குத் தொழிலுக்கமர்த்தப்பட்ட எழுத்துப்படிவப் பணியாட்டொகுதி உறுப்பினர் எவரும்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின்(2)ஆம் உட்பிரிவில், “தலைவர் அல்லது சபாநாயகர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘சபாநாயகர்’ என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், “இப்பிரிவின்கீழ் தலைவரினால் அல்லது சபாநாயகரால் ஆக்கப்பட்ட கட்டளைகளின் பிரதிகள் செயலதிகாரியினால் உரிய முறையில் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்டு” என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘இப்பிரிவின்கீழ் சபாநாயகரினால் ஆக்கப்பட்ட கட்டளைகளின் பிரதிகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் உரியமுறையில் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது சபாநாயகர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சபாநாயகர்" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு, "தலைவரின் அல்லது சபாநாயகரின் வாய்மொழிமூல அல்லது எழுத்திலான கட்டளைமீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சபாநாயகரின் வாய்மொழிமூல அல்லது எழுத்திலான கட்டளைமீது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 22அ, 22ஆ மற்றும் 22இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 22அ, 22ஆ மற்றும் 22இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"முறைப்பாடொன்றைச் செய்வதற்கு உறுப்பினரொருவரை சபாநாயகர் அனுமதித்தல்.

22அ. இப்பாகத்தின்கீழான சார்த்தப்பட்ட தவறொன்றின் விடயத்தில் முறைப்பாடொன்றைச் செய்வதற்கு எவரேனும் உறுப்பினருக்குச் சபாநாயகர் அனுமதியளிக்கலாம்.

சார்த்தப்பட்ட தவறொன்று பற்றி விடயங்களைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப் படுத்துதல்.

22ஆ. (1) சபாநாயகர், இப்பாகத்தின்கீழான சார்த்தப்பட்டவொரு தவறு ஏற்படும் பட்சத்தில் அத்தகைய கருமத்தை, அத்தகைய சார்த்தப்பட்ட தவறின்மீது அறிக்கையொன்றைக் கொடுத்துதவுவதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குப் பின்வருமாறு ஆற்றுப்படுத்தலாம்:-

(அ) பாராளுமன்றத் தீர்மானத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படின்; அல்லது

(ஆ) பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் விதப்புரையின்மீது.

(2) விடயமொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப் படவுள்ளவிடத்து, சபாநாயகர் அல்லது அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் உறுப்பினர் அல்லது அதற்கென அதிகார மளிக்கப்பட்ட பாராளுமன்றச் செயலாளர் நாயகம் –

(அ) சார்த்தப்பட்ட தவறுபற்றிய முறைப் பாட்டைச் செய்கின்ற உறுப்பினரின் கூற்றைச் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது பதிதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சபாநாயகரின் அபிப்பிராயத்தில் எந்த ஆளின் சான்று இயைபானதாகவுள்ளதோ அல்லது இருக்கக்கூடுமோ அந்த வேறெவரேனுமாளின் கூற்றைச் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின் மீது பதியலாம்.

(3) சபாநாயகர் தனது சொந்தத் தற்றுணிபின் பேரில் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் கோரிக்கையின் பேரில் அவசியமெனக் கருதினால் விடயமானது சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர் எந்நேரத்திலும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் வேறெவரேனுமாளின் கூற்று பதியப்படலாம்.

(4) பிரிவுகள் 10 முதல் 13 வரையிலானவற்றின் ஏற்பாடுகள், குழுவொன்றினால் சான்று எடுக்கப்படுவதனை இயலச்செய்யும் நோக்கத்துக் காக அவை ஏற்புடையனவாகும் அதே முறையில் இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் கூற்றுகள்

பதியப்படுவதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், மேற்கூறப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய கூற்றை எடுப்பதற்கு இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவினால் அல்லது அதன்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆள், ஒரு குழுவுக்கு அல்லது அதன் தவிசாளருக்கு அளிக்கப்படுகின்றவாறான அதே தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) பிரிவுகள் 15 முதல் 17 வரையிலானவற்றின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட ஏதேனும் சான்றுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட ஆளொருவர் அத்தவறு தொடர்பாக (2)ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கூற்றை அளிப்பதற்கு அவரது சம்மதமின்றிப் பிணிக்கப்பட்ட வராதலாகாது அல்லது வலுக்கட்டாயப்படுத்தப்படு தலாகாது.

(7) விடயமொன்று (1)ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கைக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படுமிடத்து, (2)ஆம், (3)ஆம் உட்பிரிவுகளின்கீழ் எடுக்கப்பட்ட எல்லாக் கூற்றுக்களும் பற்றிய பதிவேடு சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டு மென்பதுடன், சட்டத்துறைத் தலைமையதிபதி, அத்தகைய கூற்றுக்களைக் கவனத்துட்கொண்ட பின்னர், இப்பாகத்தின்கீழான சார்த்தப்பட்ட தவறுதொடர்பில் இச்சட்டத்தின்கீழ் மேற்கொண்டு

நடபடிகளை எடுப்பதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் போதிய சான்றுள்ளதாவென்பதைக் குறிப்பிட்டு சபாநாயகருக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய அறிக்கையானது, பாராளுமன்றத்தின் தகவலுக்காக, சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் கூற்றுக்களில் அடங்கியுள்ள சான்றின்மேல் எண்பிக்கப்படுவதற்கு இயன்றனவாகவுள்ள நிகழ்வுகளின் சுருக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவிற்கிணங்கச் சட்டத்துறைத் தலைமையதிபதி சபாநாயகருக்கு அறிக்கையொன்றைக் கொடுத்துதவியுள்ளவிடத்து, சபையானது அத்தகைய அறிக்கையைக் கவனத்துட்கொண்டபின்னர், 23ஆம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைச் செய்யும்படி சட்டத்துறைத் தலைமையதிபதியைத் தீர்மானத்தின் மூலம் தேவைப்படுத்துதல் வேண்டும்.

சட்டத்துறைத் தலைமையதிபதியினால் விண்ணப்பமொன்று செய்யப்படுதல் முடிவான சான்றாக வமையும்.

22இ. ஏதேனும் விடயத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் 23ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படுதலானது, அவ்விண்ணப்பமானது 22ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க முறையாகச் செய்யப்பட்டுள்ளதென்பதற்கு முடிவான சான்றாகவமைதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவு, "நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 49ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''அரசியலமைப்பின் 136ஆம் உறுப்புரையின்கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவை நீக்கிவிடுதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவை நீக்கிவிடுதல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "26ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "22ஆ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) ''விடயத்துக்கேற்ப வாயிற் பெருமகன் அல்லது படைக்கல சேவிதன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''படைக்கல சேவிதன்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(2) "தலைவரினால் அல்லது சபாநாயகரினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சபாநாயகரினால்" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு, "தலைவரினால் அல்லது சபாநாயகரினால்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் ஆ வில் 9ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.*

"9. (அ) தனியறையில் நடாத்தப்படுகின்ற; அல்லது

(ஆ) சபாநாயகரினால் அல்லது குழுக்களின் தவிசாளரினால் தடைசெய்யப்படுகின்ற,

சபையின் அல்லது பாராளுமன்றக் குழுவொன்றின் எவையேனும் நடவடிக்கைகளை வெளியிடுதல்.''

*முதன்மைச் சட்டவாக் கத்துக்கான பொதுத் திருத்தம்.*

**19.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் ''செயலதிகாரி'', ''பாராளுமன்றச் செயலதிகாரி'', ''தலைவர் அல்லது சபாநாயகர்'' மற்றும் ''இலங்கை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே ''செயலாளர் நாயகம்'', ''பாராளுமன்றச் செயலாளர் நாயகம்'', ''சபாநாயகர்'' மற்றும் ''இலங்கை'' என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஒழுங்குவிதியில், விதியில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் ''செயலாளர்'', ''பாராளுமன்றச் செயலாளர்'', ''தலைவர் அல்லது சபாநாயகர்'' மற்றும் ''இலங்கை'' என்பவற்றுக்கான ஒவ்வொரு குறிப்பீடும் ''செயலாளர் நாயகம்'' மற்றும் ''பாராளுமன்றச் செயலாளர் நாயகம்'', ''சபாநாயகர்'' அத்துடன் ''இலங்கை'' என்பவற்றுக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப்பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 3, 10, 17, 18, 20, 21, 27(2) மற்றும் (3), 29 அத்துடன் 30 ஆகிய பிரிவுகளில் ''சபை'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''பாராளுமன்றம்'' என்னும் சொல் இடப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**20.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.